# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 171 | வியாழக்கிழமை Thursday | 17.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நிறைவு



சென்னை: மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்தது. இந்த இரு தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் 5 முனைப் போட்டி உறுதியாகியுள்ளது.

தமிழகத்தில் மதுராந்தகம் ( தனி), தாராபுரம் (தனி) ஆகிய தொகுதிகளுக்கு அக்டோபர் 6-ம் தேதி இடைத் தேர்தல் நடைபெறஉள்ளது.இதற்கானவேட்புமனுதாக்கல் கடந்த 9-ம் தேதி தொடங்கி இன்றுடன் நிறைவடைந்தது. இந்த இடைத்தேர்தலில் தவெக,திமுக, அதிமுக, நாதக, இடதுசாரிகள் என 5 முனைப் போட்டி உருவாகியுள்ளது.மதுராந்தகம் தொகுதியில் வேட்பாளர்கள் மரகதம் குமரவேல் (தவெக), பரந்தாமன் (திமுக), கணிதா சம்பத் (அதிமுக), ஜானகிராமன் (நாம் தமிழர்), பி.சுகந்தி (சிபிஎம்) ஆகியோர் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

தாராபுரம் தொகுதியில் சத்யபாமா (தவெக), சுகன்யா ( திமுக), பானுமதி(அதிமுக),கார்த்திகா ( நாதக), லட்சுமணன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) ஆகியோர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர். வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நாளை (செப்டம்பர் 17) நடைபெறவுள்ளது. தொடர்ந்து வேட்பு மனுக்களை திரும்பப் பெறுவதற்கான அவகாசம் செப்டம்பர் 19-ம் தேதி வரை வழங்கப்பட்டுள்ளது . அன்று மாலையே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். இந்நிலையில் இடைத்தேர்தல் வாக்குப்பதிவுக்கு முந்தைய, பிந்தைய கருத்துக்கணிப்புகள் முடிவுகளை வெளியிடவும், பரப்பவும் தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற இடைத்தேர்தலில் ஐந்துமுனை போட்டி நிலவுகிறது. ஆளுங்கட்சியான தமிழக வெற்றிக் கழகம் தலைமையிலான காங்கிரஸ்,விடுதலைச்சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மதிமுக ஆகிய கட்சிகள் அடங்கிய மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் மதுராந்தகம் (தனி) தொகுதியில் மரகதம் குமரவேல், தாராபுரம் (தனி) தொகுதியில் சத்யபாமா ஆகியோர் போட்டியிடுகின்றனர். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் முன்னாள் எம்எல்ஏ பரந்தாமன், தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் வழக்கறிஞர் சுகன்யா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

அதிமுக சார்பில் மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் முன்னாள் எம்எல்ஏ கணிதாசம்பத்,தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் பானுமதி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

நாம்தமிழர் கட்சி சார்பில் மதுராந்தகம் (தனி) தொகுதியில் ஜானகிராமன், தாராபுரம் (தனி) தொகுதியில் கார்த்திகா ஆகியோர் போட்டியிடுகின்றனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மதுராந்தம் (தனி) தொகுதியில் சுகந்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தாராபுரம் (தனி) தொகுதியில் லட்சுமணன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

# தி.மு.க. முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு; சோதனையைத் தொடர்ந்து காவல்துறை அறிக்கை



திருச்சிராப்பள்ளி: தி.மு.க முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சி இல்லம் உள்பட தமிழகம் முழுவதும் 6 இடங்களில் மத்திய குற்றப்பிரிவு போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர்.

கடந்த தி.மு.க ஆட்சியில் பள்ளிக்கல்வித்துறைஅமைச்சராகபதவி வகித்தவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி. திருவெறும்பூர் தொகுதியில் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவருக்கு, கடந்த ஆட்சியில் அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டது. இதுபோன்ற சூழலில், நடந்து முடிந்த 2026 சட்டப்பேரவை தேர்தலில் தோல்வியைத் தழுவினார்.

முன்னாள் அமைச்சரான அன்பில் மகேஸ், தற்போது திருச்சி தி.மு.க தெற்கு மாவட்டச் செயலாளராக இருந்து வருகிறார். அதுமட்டுமின்றி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினின் நெருங்கிய நண்பராகவும், குடும்ப நண்பராகவும் உள்ளார்.

**மோசடி புகார்**

தனியார் பள்ளிகளுக்கு அரசு அனுமதி, நிரந்தர அங்கீகாரம் மற்றும் சட்டப்பூர்வ அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி ரூ.100 கோடி வரை மோசடி செய்ததாக புகார் எழுந்துள்ளது. இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ள மத்திய குற்றப்பிரிவு போலீசார் (Central Crime Branch police) விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே, தமிழக தனியார் பள்ளிகள் சங்கத்தின் தலைவரும், தி.மு.க பிரமுகருமான பி.டி.அரசகுமாரை கைது செய்த மத்திய குற்றப்பிரிவு போலீசார், அவரை குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைத்துள்ளனர். மேலும், அரசகுமாருக்கு உடந்தையாக இருந்த அவரது உறவினர்களான மதுரையைச் சேர்ந்த ஆரோக்கியராஜ் என்ற ராஜா மற்றும் திருச்சியைச் சேர்ந்த சுரேஷ் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அசரகுமாரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் தொடர்ச்சியாகவே தற்போது சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**அன்பில் மகேஸ் வீட்டில் சோதனை**

அதன்படி, திருச்சி தென்னூர்,அண்ணாநகரில் உள்ள அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் இல்லத்தில், இன்று (செப். 16) காலை முதலே மத்திய குற்றப்பிரிவு போலீசார் தீவிரசோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இதில்,தனியார்பள்ளிகளிடம் அனுமதி வழங்குவதில் லஞ்சம் பெறப்பட்டதா? முறைகேடுகள் நடைபெற்றதா? என்பது குறித்த ஆவணங்களை மையமாகக் கொண்டு, போலீசார் விசாரித்து வருகின்றனர்.

இதற்கிடையே, அன்பில் மகேஸ் இல்லத்தில் நடைபெறும் சோதனை குறித்து தகவல் அறிந்த தி.மு.க-வினர், அவரது வீட்டிற்கு முன்பாக குவிந்து வருவதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**6 இடங்களில் நடக்கும் சோதனை**

திருச்சியில் உள்ள வீடு மட்டுமின்றி, சென்னை உள்ளிட்ட அன்பில் மகேஸுக்கு தொடர்புடைய 6 இடங்களில் ஒரே நேரத்தில் இந்த சோதனை நடத்தப்பட்டு வருகிறது. 6 இடங்களிலும் நடைபெற்று வரும் சோதனை முழுமையாக நிறைவடைந்த பின்னரே, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பிற ஆதாரங்கள் குறித்த முழுமையான விவரங்கள் தெரியவரும் என போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனையின் முடிவில் கிடைக்கும் ஆவணங்கள் மற்றும் பணப் பரிவர்த்தனை விவரங்களின் அடிப்படையில் வழக்கில் மேலும் யார் யாருக்கு தொடர்புள்ளது என்பது குறித்து மத்திய குற்றப்பிரிவு போலீசார் அடுத்தகட்ட விசாரணையை மேற்கொள்ள உள்ளனர்.

இதற்கிடையே, தகவல் அறிந்த தி.மு.க முதன்மைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என். நேரு, தென்னூரில் உள்ள அன்பில் மகேஸின் வீட்டிற்கு நேரில் சென்றுள்ளார்.

ஆனால், போலீசார் அவரை வீட்டிற்குள் செல்ல அனுமதிக்க மறுத்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து,செல்போன் மூலம் வீட்டிற்குள் இருந்த கட்சி நிர்வாகியை தொடர்பு கொண்டு பேசிய அவர் அங்கிருந்து புறப்பட்டு சென்றதாகக் கூறப்படுகிறது.

**பழிவாங்கும் நடவடிக்கை**

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய கே.என். நேரு, "தி.மு.க-வில் சிறப்பாகச் செயல்படும் நபர்களைக் குறிவைத்து, வேண்டுமென்றே பயமுறுத்தும் வகையில் விஜய் அரசு இந்த சோதனை நடத்தி வருகின்றனர். திமுகவில் தீவிரமாகச் செயல்பட்டு, மக்கள் மத்தியில் யாரெல்லாம் பிரபலமாக இருக்கிறார்களோ, அவர்களை எல்லாம் குறிவைத்து விஜய் அரசாங்கம் இதுபோன்ற சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்த நடவடிக்கையைப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே நாங்கள் பார்க்கிறோம். நீதிமன்றத்தின் வாயிலாக நாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபித்து வெளியே வருவோம்" எனத் தெரிவித்தார்.

# பிஎஃப் திட்டத்தில் மாதச் சம்பள வரம்பு ரூ.25,000 ஆக உயர்வு




பிஎஃப் திட்டத்தில் மாதச் சம்பள உச்சவரம்பை ரூ.15,000-லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனை தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். இது குறித்து மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் முன்மொழிவை ஏற்று, ஊழியர் வருங்காலவைப்புநிதிஅமைப்பின் கீழ் கட்டாயப் பாதுகாப்புக்கான மாதச் சம்பள வரம்பை ரூ.15,000-ல் இருந்து ரூ.25,000 ஆக உயர்த்த ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம், கூடுதலாக 51 லட்சத்துக்கும் அதிகமான ஊழியர்கள் கட்டாய பிஎஃப் வரம்புக்குள் கொண்டுவரப்படுவார்கள்

2004 முதல் 2014 வரையிலான பத்தாண்டுகளில் பிஎஃப் மாதச்சம்பள வரம்பில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. அதன் பின்னர் செப்டம்பர் 2014-ல் இது ரூ.6,500-ல் இருந்து ரூ.15,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இடைப்பட்ட ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான ஊதிய உயர்வு, வருமான அதிகரிப்பு மற்றும் முறைசார் வேலைவாய்ப்பின் விரிவாக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தற்போது இந்த ஊதிய வரம்பு ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தற்போது, மாதத்துக்கு ரூ.15,000-க்கு மேல் ஊதியம் பெறும் புதிய ஊழியர்கள் பிஎஃப் வரம்புக்குள் வருவதில்லை. இதனால் அவர்கள் கட்டாய வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம் மற்றும் அதனுடன் தொடர்புடைய காப்பீட்டுப் பாதுகாப்பு ஆகியவற்றை பெற முடிவதில்லை.

தற்போது ஊதிய வரம்பை ரூ.25,000 ஆக உயர்த்துவதன் மூலம், ரூ.15,000 முதல் ரூ.25,000 வரையிலான ஊதியப் பிரிவில் உள்ள ஊழியர்கள் பிஎஃப் வரம்புக்குள் கொண்டுவரப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## ஓசோனை பாதுகாப்போம்: மாணவர்களுக்கு விழிப்புணர்வு



தேவகோட்டை: உலக ஓசோன் தினத்தை முன்னிட்டு, தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில் ஓசோன் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

பள்ளித் தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை வகித்தார். ஆசிரியர் ஸ்ரீதர், ஓசோன் பாதுகாப்பின் முக்கியத்துவம்குறித்து மாணவர்களுக்கு விளக்கினார். தொடர்ந்து ஓசோன்பாதுகாப்பு குறித்த ஓவியப் போட்டி நடை பெற்றது.

மேலும், பள்ளி வளாகத்தில் மாணவ, மாணவியர் மரக்கன்றுகளை நட்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மாணவி நந்தனா வரவேற்றார். மாணவி ரித்திகா நன்றி கூறினார்.

## கோவையில் மழை வேண்டி நடந்த விநாயகர் சதுர்த்தி பூஜை
## பூஜை நடக்க நடக்க நிகழ்ந்த அதிசயம், கொட்டி தீர்த்த வர்னபகவான்



விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பல்வேறு பகுதிகளில் கணபதி விநாயகர் சிலைகள் அமைக்கப்பட்டு பூஜைகள் நடந்து வருகின்றன. இந்தநிலையில்,கோவை கஸ்தூரி நாயக்கன் பாளையம் பகுதியில் வசிக்கின்ற பள்ளி கல்லூரி செல்லும் இளைஞர்கள் ஒன்றிணைந்து,5 1/2 அடி உயரத்திலே கணபதி விநாயகர் சிலை வைத்துள்ளனர். விநாயகருக்கு பொங்கல் சுண்டல் கொழுக்கட்டை போன்றவற்றை படைத்து மழை வேண்டி பூஜைகள் செய்ய தொடங்கினர். பேண்ட் வாத்தியங்கள் வாசிக்க வாசிக்க பூஜைகள் நடந்து கொண்டிருந்த பொழுது, திடீரென இடி மின்னல் ஏற்பட்டது. அப்பொழுது மழை பொழிய ஆரம்பித்தது. இதனால் பூஜையில் ஈடுபட்டிருந்தவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து பேசிய கல்லூரி மாணவன் சரவணன், "தங்கள் ஊரில் பெரும்பாலானோர் விவசாயம் செய்கின்றனர். அவர்களுக்கு போதுமான நீர் இல்லாததால் கடும் நெருக்கடிகளை சந்திக்கின்றனர். தங்கள் ஊர் மட்டுமின்றி பல்வேறு இடங்களிலும் மழை இன்றி விவசாயிகள் நெருக்கடியான நிலையில் இருப்பதினால், மழை வேண்டி இன்று பூஜைகள் செய்தோம். பூஜைகள் தொடங்கிய சிறிது நேரத்திலேயே மழை பொழிய ஆரம்பித்தது மகிழ்ச்சிதருகிறது.விநாயகர் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றி விவசாயிகளுக்கு வளம் பெறச் செய்ய வழிவகை செய்திருக்கிறார்.

அதேபோன்று "போதை இல்லாத சமூகம் பாதுகாப்பான சமூகம்" என்ற அடிப்படையில், போதை ஒழிய வேண்டும் எனவும் வேண்டுதலுடன் நாங்கள் பூஜைகள் செய்தோம்" என கல்லூரி மாணவன் சரவணன் தெரிவித்தார்.

## தூத்துக்குடி மாநகரில் புதிய முயற்சி:
## ஒரு வார்டில் அனைத்து கட்டிடங்களிலும் சோலார் வசதி; மேயர் ஜெகன் பெரியசாமி தகவல்



தூத்துக்குடி மாநகராட்சியில் முதற்கட்டமாக ஒரு வார்டைத் தேர்வு செய்து, அங்குள்ள அனைத்து கட்டிடங்களிலும் சோலார்வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார்.

தூத்துக்குடி மாநகராட்சியில் 1 முதல் 20 வார்டுகளுக்கு உட்பட்ட மக்களுக்கான பகுதி சபா கூட்டம் மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் மாநகராட்சி ஆணையர் பிரியங்கா தலைமையில் நடைபெற்றது. இதில் 20 வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்கள் பங்கேற்று தங்கள் பகுதிகளின் குறைகளை தெரிவித்தனர். கூட்டத்தில் பேசிய மேயர், தூத்துக்குடியில் அடுத்த 50 ஆண்டுகளுக்கு பெருமழையால் பாதிப்பு ஏற்படாத வகையில் பக்கிள் ஓடையை அகலப்படுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக தெரிவித்தார். மாநகரில் 4,000 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், பல்வேறு பூங்காக்கள் மற்றும் பெண்களுக்கான தனிப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தமிழகம் முழுவதும் வறட்சி நிலவும் சூழலிலும் தாமிரபரணி குடிநீர் விநியோகம்சீராகநடைபெற்று வருவதால், பொதுமக்கள் குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் மேயர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பேசிய ஆணையர் பிரியங்கா, வீடுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை, சுகாதாரக் கழிவுகள், பிளாஸ்டிக் மற்றும் இரும்புக் கழிவுகள் என தனித்தனியாகப் பிரித்து வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார். இதன் மூலம் கழிவுகளை எளிதாக மறுசுழற்சி செய்ய முடியும் என்றும்,டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்தபொதுமக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## ஆனைமலை அருகே தடை செய்யப்பட்ட கேரள லாட்டரி சீட்டுகள் பறிமுதல்; 6 பேர் கைது



பொள்ளாச்சி அடுத்த ஆனைமலை பாரதி நகர் பகுதியை சேர்ந்தவர் கவுதம் (34) இவர் கேரளம் மீனாட்சிபுரம் பகுதியில், லாட்டரிசீட்டு கடை நடத்தி வருகிறார். இவரது வீட்டில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை பதுக்கி வைத்திருந்து வாட்ஸ்-அப் வாயிலாக விற்பனை செய்து வருவதாக கோவை மாவட்ட எஸ்.பி.பவன்குமார் ரெட்டிக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து எஸ்.பி. உத்தரவின்பேரில்ஆனைமலை காவல் ஆய்வாளர் சத்தியசீலன் தலைமையில் காவலர்கள் இன்று கவுதம் வீட்டில் நடத்திய சோதனையில், 5,900 கேரள மாநில லாட்டரி சீட்டுகள் பதுக்கி வைத்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்த போலீஸார், கவுதம் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த உறவினர்கள் ஜெயசவுந்தரயன் (32),ஜீவானந்தம் (26),மற்றும் 3 பெண்கள் உள்பட 6 பேர் மீது வழக்குப் பதிவு செய்ததுடன் அவர்களை கைதும் செய்தனர்.

இதையடுத்து அவர்களைக்கைதுசெய்து அவர்களிடம் இருந்து ரூ.2.5 லட்சம் மதிப்பிலான லாட்டரி சீட்டுகளை பறிமுதல் செய்துள்ளோம். மேலும், அவர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது" என்றனர்.



## அமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்த சிஸ்பா அமைப்பினர்

தி சவுத் இந்தியா ஸ்பின்னர்ஸ் அசோசியேஷன் அமைப்பின், 35வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் கோவையில் நடைபெற்றது இதில், சங்கத்தின் வளர்ச்சிக்காக அரசிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

தி சவுத் இந்தியன் ஸ்பின்னர்ஸ் அசோசியேஷன் எனும் சிஸ்பா அமைப்பானது கோவையில் கடந்த 35 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றது. இந்த அமைப்பின் சார்பாக 35வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சிஸ்பா அமைப்பின் தலைவர் அருண் கார்த்திக் தலைமை தாங்கினார். அமைப்பின் கௌரவ செயலாளர் ஜெகதீஷ் சந்திரன், 2025 மற்றும் 2026ம் ஆண்டுக்கான வருடாந்திர ஆண்டறிக்கையை வாசித்து, கடந்த ஆண்டில் அமைப்பு மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகள் மற்றும் நூற்புத் தொழில் சார்ந்த பல்வேறு கோரிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் சிறப்பு விருந்தினராக தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரும் கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான சம்பத்குமார் கலந்து கொண்டு,சிஸ்பா அமைப்பின் வளர்ச்சிக்கும்முன்னேற்றத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய முன்னாள் தலைவர்கள், சின்னியன், மற்றும் குப்புசாமி ஆகியோருக்கு விஷினரிஸ் ஆப் சிஸ்பா எனும் விருதுகளை வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். தொடர்ச்சியாக அமைப்பின் வளர்ச்சிக்காக, அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி, அதனை அமைச்சரிடம் நிர்வாகிகள் வழங்கினர். அந்த தீர்மானத்தில் பருத்தி மீதான இறக்குமதி வரி 11 சதவிகிதத்திற்காக அரசுக்கு நன்றியைதெரிவிப்பதாகவும், மின்சாரக் கட்டண உயர்வை தவிர்த்த அரசுக்கு நன்றி எனவும், தமிழகத்தில் பருத்தி சாகுபடியை அதிகரிக்க அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் மின்சார சேமிப்புக்கான மூலதன மானியம் 25% திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும், நூற்பாலைகளில் பணியாற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அரசி, பருப்பு, சமையல் எண்ணெய், உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் நியாய விலை கடைகளில் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும்,என்பது போன்ற பல்வேறு தீர்மானங்களை கோரிக்கைகளாகவும் தெரிவித்துள்ளனர். இறுதியாக சிஸ்பா அமைப்பின் துணைத் தலைவர் பிரதீப் நன்றியுரை கூறி விழாவை நிறைவுசெய்தார்என்பது குறிப்பிடத்தக்கது.

### முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் பிறந்தநாளை முன்னிட்டு,
## கோவை புலியகுளம் பகுதியில் உள்ள முந்தி விநாயகர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது



இந்திய நாட்டின் முன்னாள் நிதியமைச்சரும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவருமான ப.சிதம்பரத்தின் 81வது பிறந்தநாளைமுன்னிட்டு கோவை புலியகுளம் விநாயகர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னதாக விநாயகர் திருக்கோயிலில் யாக வேள்விகள் நடத்த பட்டு, சிறப்பு பூஜைகள், நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கோவை மாநகர் மாவட்ட இராஜிவ்காந்தி பஞ்சாயத்து ராஜ் நிகேதன் கமிட்டியின் தலைவர் எம். எஸ் பார்த்திபன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் கனேசன், பாசமலர் சண்முகம், ராஜமாணிக்கம், ஆகியோர் முன்னிலைவகித்தனர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.என் கந்தசாமி, மாநகர் மாவட்ட தலைவர் விஜயகுமார், மாநில ஐஎன்டியூசி தொழிலாளர் சங்க தலைவர் கோவை செல்வம், பேரூர் பேருராட்சி முன்னாள் தலைவர் திருமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர் மேலும் முன்னாள் மாமன்ற உறுப்பினர் சோபனா செல்வம், கனேசன் மோகன் ராஜ்,செர்ரிலூயிஸ், லட்சுமணசாமி, குணசேகரன், ஜி.கே,ராஜூவ் சக்ரவர்த்தி, வின்சென்ட், ரமேஷ், ஜனார்த்தனன், ஆனந்தராஜ்,கருடாபாலு, மாணிக்கம், கோட்டை செல்லப்பா, காமராஜ், பாப்பாத்தி,ராஜன்,செல்வராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனை தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதங்களும் வழங்கபட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



தூத்துக்குடி திமுக தலைவரும் தமிழக முன்னாள் முதலமைச்சர் முக.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி அண்ணா 118வது பிறந்தநாளையொட்டி புதிய மாநகராட்சி அருகிலுள்ள அண்ணா சிலைக்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் தலைமையில் மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதைத்தொடர்ந்து முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்க பொருளாளர் எஸ்.ஆர். சந்தனராஜ் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் அண்ணா 118வது பிறந்தநாளையொட்டி புதிய மாநகராட்சி அருகிலுள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்கத் தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச் செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர்இசக்கிமுத்து உள்ளிட்ட சங்கநிர்வாகிகளும் மற்றும் கவுன்சிலர்கள், பகுதிசெயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு பங்கேற்று மரியாதை செலுத்தினர்.

# தூத்துக்குடியில் அண்ணாபிறந்த நாள் விழா: முன்னாள் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் மரியாதை



தூத்துக்குடியில்அண்ணாவின் 118வது பிறந்தநாளையொட்டி அவரது சிலைக்கு முன்னாள் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தூத்துக்குடி திமுக தலைவரும் தமிழக முன்னாள் முதலமைச்சர் முக.ஸ்டாலின்அறிவுறுத்தலின் படி அண்ணா 118வது பிறந்தநாளையொட்டி புதிய மாநகராட்சி அருகிலுள்ள அண்ணா சிலைக்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் தலைமையில் மேயர் ஜெகன் பெரியசாமி மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து முன்னாள் அமைச்சர் கீதாஜீவன்மேயர்ஜெகன் பெரியசாமி மரியாதை செய்தனர். நிகழ்ச்சியில், துணை மேயர் ஜெனிட்டா, மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பொருளாளர் ரவீந்திரன், மாவட்ட அணி நிர்வாகிகள் அந்தோணிஸ்டாலின், சீனிவாசன்,கவிதாதேவி, நாகராஜன், அருணாதேவி, அருண்குமார், ராமர், பிரபு, ஜேசையா, நிக்கோலாஸ்மணி, ஜேசையா, பகுதி செயலாளர்கள் சுரேஷ்குமார், ஜெயக்குமார், மாநகர அணி நிர்வாகிகள் முருகஇசக்கி, சாரதி, நைஸ் பரமசிவம், ஆனந்தசேகர்,வக்கீல்கள் ரூபராஜா, நாகராஜன்பாபு,செய்யது காசிம், சக்திவேல், மாவட்ட பிரதிநிதிகள் நாராயணன், சக்திவேல், செல்வக்குமார், தொழிற்சங்க நிர்வாகிகள் இபி கருப்பசாமி, வேல்முருக உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# நந்தியாலத்தில் இரத்தசோகை விழிப்புணர்வு நிகழ்ச்சி



ராணிப்பேட்டை மாவட்டம் நந்தியாலம் கிராமத்தில் பஞ்சாயத்து அலுவலகம் முன்பாக இரத்தசோகை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

சிஎம்சிநர்சிங்கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில், இரத்தசோகை நோயின் பாதிப்புகள், அறிகுறிகள் மற்றும் அதனைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாணவர்கள் நாடகம் நடத்தினர்.

இரத்தசோகையைத் தடுக்க இரும்புச்சத்து நிறைந்த கீரை வகைகள், பருப்பு வகைகள், பேரிச்சம்பழம், மாதுளை, முட்டை உள்ளிட்ட சத்தான உணவுகளை தினசரி உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

நந்தியாலம் ஊராட்சி மன்றத் தலைவர் தேவி பூபாலன் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு சிஎம்சி நர்சிங் கல்லூரி ஆசிரியர்

ஜீலியஸ் ஜான் சாமுவேல் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்கள் விழிப்புணர்வு தகவல்களை ஆர்வமுடன் கேட்டு பயனடைந்தனர்.

# ஆறு மணி நேரத்தில் செயின் பறிப்பு குற்றவாளிகளை கைது செய்த கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை



CRPF-ல் இருந்து ஓய்வு பெற்ற மூலச்சல்விளை பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் என்பவரின் மகன் குமார் (59) என்பவர், நேற்று செருப்பங்கோடு-காட்டுவிளை சாலையில் தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, செருப்பங்கோடு அருகே பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டுநபர்கள்அவரை தாக்கி கீழே தள்ளி, கழுத்தில் அணிந்திருந்த சுமார் 9½ சவரன் தங்கச் செயினை பறித்துச் சென்றனர்.

இதுகுறித்து குமார் அளித்த புகாரின் பேரில், இரணியல் காவல் நிலையத்தில் குற்ற எண் 508/2026-ன் கீழ் BNS பிரிவு 304(2)ன் படி வழக்குப்பதிவு செய்து காவல்துறையினர் தீவிர விசாரணைமேற்கொண்டனர்.

சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாக கண்டறிந்து கைது செய்ய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .அன்ஷூல் நாகர், உத்தரவிட்டார். அதன்படி குளச்சல் உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர்.காந்தி' மேற்பார்வையில், இரணியல் காவல் ஆய்வாளர். அந்தோணியம்மாள் தலைமையிலான தனிப்படையினர் விரிவான விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையின் அடிப்படையில், சம்பவம் நடைபெற்ற ஆறு மணி நேரத்திற்குள் குற்றவாளிகளான பிராந்தன்சேரி பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவரின் மகன் அருணாச்சலம் (35) மற்றும் திங்கள்நகர் நடுத்தெரு பகுதியைச் சேர்ந்த ஐயப்பன் என்பவரின் மகன் அனீஸ் (31) ஆகியோரை காவல்துறையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் மேற்கொண்ட விசாரணையில்,மேற்படி செயின் பறிப்பு சம்பவத்தை தாங்களே செய்ததாக ஒப்புக்கொண்டனர். மேலும், அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட தங்கச் செயின் மீட்கப்பட்டு, தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவான நடவடிக்கை மூலம் ஆறு மணி நேரத்திற்குள் குற்றவாளிகளை கைது செய்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய இரணியல் காவல்துறையினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டினார்.

மேலும் இது போன்ற செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கபடும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர். எச்சரித்துள்ளார்.



# ரூ.18 கோடி மதிப்பீட்டில் கால்வாய்களில் கசிவு காப்பீடு அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ந.ப்ரியா ரவிச்சந்திரன், (16.09.2026) "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாமின் ஒரு பகுதியாக ஆற்காடு வட்டம், ஆற்காடு நகரப்பகுதியில் நடைபெற்று வரும் நீர்வளத்துறை பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதன்படி, நீர்வளத்துறையின் சார்பில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் கிளைவ் பஜார் கால்வாய், தாசிபுரம் கால்வாய் மற்றும் முப்பதுவெட்டி கால்வாய்களில் கசிவு காப்பீடு (Lining) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை ஆய்வு செய்தார்.

பணிகளின்தரம்,முன்னேற்றம் மற்றும் நிறைவேற்ற நிலை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த மாவட்ட ஆட்சியர், திட்டப்பணிகளைவிரைவாகவும் தரமாகவும் முடித்து பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர்திரு எஸ்.எம். சுகுமார், வருவாய் கோட்டாட்சியர் திரு ராஜி, நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் திரு குமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

இத்திட்டத்தின் மூலம் கால்வாய்களில் நீர் கசிவு தடுக்கப்பட்டு,நீர்சேமிப்பு திறன் அதிகரிப்பதுடன், பாசன வசதியும் மேம்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிதம்பரத்தில் தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுபெற்றோர் சங்க கூட்டம்



கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுபெற்றோர் சங்கம் சார்பில் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தின் தொடக்கமாக சங்கத்தில் புதிதாக இணைந்த உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்று கவுரவிக்கப்பட்டது.

சிதம்பரம் தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுபெற்றோர் சங்க செயலாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குமார், கனகசபை, சுவாமிநாதன், சுந்தரம் ஆகியோர் முன்னிலைவகித்தனர்.

பாண்டியன் தமிழ்தாய் வாழ்த்து பாடி விழாவை துவங்கிய நிலையில் தொடர்ந்து ராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து சமீபத்தில் இயற்கைஎய்திய ஸ்ரீமுஷ்ணத்தைச் சேர்ந்த மின்வாரிய ஓய்வுபெற்ற இணை மின் பொறியாளர் ஜெயராமன், உதவி பொறியாளர் ஜோதிமணி மற்றும் சாந்தகம் ஆகியோரின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டு மலர் அஞ்சலி மற்றும் மௌனஅஞ்சலிசெலுத்தப்பட்டது.

மேலும், மறைந்த நிர்வாகிளின் குடு`ப உறுப்பினர்களுக்கு சங்கத்தின் சார்பில் தேவையான அனைத்து எதிர்கால நடவடிக்கைகளிலும், உரிய உதவிகளிலும் தொடர்ந்து துணை நிற்போம் என உறுதியளிக்கப்பட்டது. தொடர்ந்து 60 மற்றும் 80-வது திருமண ஆண்டு விழாவைக் காணும் சங்க நிர்வாகிகளின் தம்பதிகளான பாலசுப்பிரமணியன் - மல்லிகா, சின்னமணி - வள்ளி, நாகராஜன்-சாந்தி ஆகியோருக்கு மலர் மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து கவுரவிக்கப்பட்டது.

பின்னர் கேக் வெட்டி திருமண ஆண்டு விழா கொண்டாடப்பட்டு, நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சியில் திருநாவுக்கரசு, சடகோபன், ராஜேந்திரன், பன்னீர்செல்வம், ராஜசேகரன், மணி, சீனிவாசன், ராமசாமி, தில்லை கோவிந்தன், கயல்விழிதேவி, ராஜவேல், செந்தமிழ்செல்வன், பரமகுரு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

# திமுக நிர்வாகி கோ. மாரிமுத்து படத்திறப்பு விழா காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் EX.எம்.எல்.ஏ. பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்றதொகுதிக்கு உட்பட்ட லத்தூர் ஒன்றியம் வீரபோகம் கிராமத்தை சேர்ந்த திராவிட முன்னேற்ற கழகத்தின் செயலாளரும் கழகத்தின் மூத்த முன்னோடியுமான மறைந்த திரு. கோ. மாரிமுத்து அவர்களின் படத்திறப்பு விழாவினை கழகத்தின் எளிமையின் சிகரம் திரு. க. சுந்தர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்சியில் மாநில இலக்கிய துணை அமைப்பாளர் திரு.தசரதன் அவர்கள் கழக முன்னோடிகள் திரு மணி திரு. M. S. பாபு ஒன்றிய செயலாளர் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் திரு. அர்சுணன் திரு. வேலாயுதம் திரு. முனுசாமி திரு தென்னக செல்வன்

R பன்னீர்செல்வம் ,

சசிகுமார், சதீஷ், வீரபோகம் முன்னாள் தலைவர் A. வரதன், தம்பிதுரை, ஈஸ்வர, மூர்த்தி, ராஜேந்திரன், கிருபாகரன், ஒரத்தி முன்னாள் தலைவர் O-P.C மாறன் O.P.C.அறிவுநிதி உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்

# 2029 மக்களவைத் தேர்தலில் வாக்குச்சாவடி எண்ணிக்கை 46% அதிகரிக்கும்

புதுடெல்லி: வரும் 2029-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை 46 சதவீதம் அதிகரிக்கும் என்று தலைமைத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2029-ம் ஆண்டு மக்களவைத் தேர்தல் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டன. இதற்கு தலைமைத் தேர்தல் ஆணையம் அளித்துள்ள பதிலில் கூறியிருப்பதாவது: கடந்த 2024-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது நாடு முழுவதும் 10.52 லட்சம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. வரும் 2029-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது 15.38 லட்சம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும் .இதன்படி கடந்த தேர்தலை விட 2029-ம் ஆண்டு தேர்தலில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 46 சதவீதம் அதிகரிக்கும். கடந்த 2019-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது தேர்தல் ஆணையத்திடம் 14.88 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் 11.30 லட்சம் கட்டுப்பாட்டு பிரிவு சாதனங்களும் இருந்தன. தற்போது 30.48 லட்சம் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும், 21.92 லட்சம் கட்டுப்பாட்டு பிரிவு சாதனங்களும் உள்ளன. தேர்தலின் போதும் பழைய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நீக்கப்பட்டு புதிய இயந்திரங்கள் வாங்கப்படுவது வழக்கம். இதன்படி 3.57 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் 1.25 லட்சம் கட்டுப்பாட்டு பிரிவு சாதனங்களும் நீக்கப்பட உள்ளன. இதற்குப் பதிலாக, வரும் 2029-ம் ஆண்டு தேர்தல் பணிக்காக ரூ.4 86 கோடியில் புதிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்,வி வாங்கப்படும்.இவ்வாறு கூறப்பட்டுள்ளது.



முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் 81வது பிறந்தநாளை முன்னிட்டு

# ஈரோடு பெரிய மாரியம்மன் வகையறா திருக்கோயிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது



அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய நிதியமைச்சருமான திருமிகு. ப.சிதம்பரம் அவர்களின் 81-வது பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று 16.09.2026 ஈரோடு பெரிய மாரியம்மன் வகையறா திருக்கோயிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினருமான *திரு. ஆர்.எம்.பழனிசாமி அவர்கள்* தலைமை தாங்கினார்.

ஈரோடுதெற்குமாவட்ட காங்கிரஸ்கமிட்டிதலைவர் கே.பி.முத்துக்குமார், முன்னாள் மாவட்ட தலைவர்கள் ஈ.பி.ரவி, டி.திருச்செல்வம் ஆகியோர்முன்னிலைவகித்தனர். ப.சிதம்பரம் அவர்கள் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வேண்டி சிறப்பு பிரார்த்தனை செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ்கமிட்டிதலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.பி.பாலசுப்ரமணியம், எ.மாரியப்பன், கொடுமுடி வட்டாரத் தலைவர் ஒத்தக்கடை கோபால், சென்னிமலை வட்டார தலைவர் ஓசி சண்முகம், மொடக்குறிச்சி வட்டார தலைவர் ரவி, மண்டல தலைவர்கள் ஆர்.விஜயபாஸ்கர், மாமரத்துபாளையம் எஸ்.கோபி, பெருந்துறை கவுன்சிலர் பஸ்ரியா பேகம்,கொடுமுடி

காங்கிரஸ் கவுன்சிலர் தம்பி (எ) முனிராஜ், மகிளா காங்கிரஸ் மாநகர் மாவட்ட தலைவி அன்னபூரணி, மாவட்ட சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என்.பாஷா, மாவட்ட ஊடக பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், சர்வேஸ்வரன், வேலுச்சாமி, மனோஜ், என்.கே.பி.தங்கவேல், இலக்கியச்செல்வன், விஜயராகவன், எ.நூருதீன் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம்,அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு தொடர்புடைய அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.வே. ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள் கண்காணிப்பு அலுவலர்கள் திரு.கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப.,அவர்கள் அரசுச் செயலாளர்,தொழிலாளர்நலன்மற்றும்திறன்மேம்பாட்டுத்துறை,சென்னை.திரு.ப.மதுசூதன்ரெட்டி,இ.ஆ.ப.,அவர்கள், இயக்குநர்,நகராட்சிநிர்வாகஇயக்ககம்,சென்னை.இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மரு.டி.ஜி.வினய்,இ.ஆ.ப., அவர்கள் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.கல்லாணை அவர்கள் மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர். தங்கப்பாண்டி அவர்கள், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.வி. கருப்பையா அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.எம்.கோபிசன் அவர்கள், மாநகராட்சி மேயர் (பொ) / துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள் மாநகராட்சி ஆணையாளர் திரு.கௌரவ் குமார்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# India 'deeply concerned' over alleged Houthi drone attack near Mecca, calls for regional peace

*India on Wednesday expressed deep concern over an attempted drone attack on the holy city of Mecca in Saudi Arabia and called for the early restoration of peace and stability in West Asia.*



*Saudi authorities said a drone launched by Yemen's Houthi rebels towards Mecca was intercepted and destroyed before it entered restricted airspace over the holy city on Tuesday evening. The Houthis have denied the Saudi account and said they do not pose a threat to Mecca.*

*"We are deeply concerned at the drone attack near Makkah," external affairs ministry spokesperson Randhir Jaiswal said. "The incident near Makkah is particularly concerning, given the special significance of the city to Muslims across the world.*

*India reiterates its condemnation of attacks on the sovereign territory of Saudi Arabia and of actions that endanger civilian lives and infrastructure, Jaiswal said. "We hope for the early restoration of peace and stability in the region," he said.*

*The drone attack targeting Mecca is being seen as a major escalation in renewed hostilities between Saudi Arabia and the Houthis, who have taken control of key territories close to the Bab el-Mandeb Strait in recent days. Turki al-Maliki, the Saudi-led coalition's spokesperson, said the Royal Saudi Air Defence Forces intercepted the hostile drone south of Mecca on Tuesday evening. He warned that the security of the two holy mosques and pilgrims is a "red line". Saudi Arabia issued a security alert for Mecca on Tuesday for the first time since the Houthis last attempted to target the holy city in 2017.*

*The alert, however, was lifted after a few minutes.*

*A Houthi military source strongly rejected the claim that Houthi forces pose a threat to Mecca or other holy sites in a statement issued to Yemen's SABA news agency. "We categorically deny that there is any threat from Yemen directed at the city of Makkah or any other holy sites," the source said.*

*The conflict between Saudi Arabia and the Iran-backed Houthis dates to 2015, when Saudi forces intervened in Yemen after the rebels seized the city of Sanaa and ousted the internationally recognised government. India had on Tuesday reiterated its opposition to attacks on merchant shipping and civilian infrastructure amid the West Asia conflict and said Houthi strikes on Saudi Arabia's economic assets undermine regional stability and navigation through the Bab el-Mandeb Strait.*



"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம், பவானி, பருவாச்சி கால்நடை மருந்தகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.09.2026) ஆய்வு மேற்கொண்டார்.



"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம், பவானி, திப்பி செட்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களின் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.09.2026) ஆய்வு மேற்கொண்டார்.

கோவை மாவட்டம் வனவள்ளி,அடுத்த லிங்கனூர் பகுதியில் சக்தி விநாயகர் திருக்கோவில், முத்து மாரியம்மன் திருக்கோவில்,

# விஷ்ணு துர்க்கை திருக்கோவில், திருக்குட நன்னீராட்டு பெருவிழா மகா கும்பாபிஷேக விழா நிகழ்ச்சி நடைபெற்றது



அருள்மிகு ஸ்ரீ சக்தி விநாயகர் திருக்கோவில், முத்து மாரியம்மன் திருக்கோவில், விஷ்ணு துர்க்கை திருக்கோவில், திருக்குட நன்னீராட்டு பெருவிழா மகா கும்பாபிஷேக விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

கோவை மாவட்டம் வனவள்ளி, அடுத்த லிங்கனூர் பகுதியில் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோவில், ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில், ஸ்ரீ விஷ்ணு துர்க்கை திருக்கோவில், அமைந்துள்ளது. திருக்கோவிலில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா மற்றும் மகா கும்பாபிஷேகவிழாநிகழ்ச்சி நடைபெற்றது. இதனை கோவை காமாட்சிபுரி ஆதீனம் ஞானகுரு சிவலிங்கேஸ்வர சுவாமிகள் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். விழாவுக்கான ஏற்பாடுகளை அறக்கட்டளை நிறுவனத் தலைவர் சிவ தேசிகன், அறக்கட்டளை செயலாளர் ரவிக்குமார், அறக்கட்டளை பொருளாளர் ரகுநாதன், உள்ளிட்ட பலர் செய்திருந்தனர். முன்னதாக கணபதி ஹோமத்துடன் துவங்கிய இந்த கும்பாபிஷேகவிழாவில், பல்வேறு புண்ணிய நதிகளில் இருந்து தீர்த்த நீர் கொண்டுவரப்பட்டு, திருக்கோவில் வளாகத்தில் வைத்து, யாக பூஜைகள் செய்து சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. இதனை தொடர்ந்து ஓதுவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க, திருக்குடத்தில் உள்ள புனித நீரை திருக்கோவிலை சுற்றிலும் வலம் வந்து, ஓதுவாச்சாரியார்கள், மங்கள வாக்கியங்கள் முழங்க திருக்கோவில் கலசத்தின் மீது ஊற்றி, மகா கும்பாபிஷேக அஷ்ட பந்தன விழாவை சீரும் சிறப்புமாக நடத்தினர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு நடத்தினர். இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் தீர்த்த நீர் தெளிக்கப்பட்டு, பிரசாதங்கள் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



மதுரை சர்வதேச விமான நிலையத்தில் விரிவாக்கப் பணி 11கள் நடைபெற்று வரும் சூழலில் பணியை விரைந்து முடிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மதுரை விமான நிலையம் கூட்ட அரங்கில் நடைபெற்றது இதில் தமிழக சட்டத்துறை அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் எம்பிக்கள் மாணிக்கம் தாகூர்,சு. வெங்கடேசன்மதுரை விமான நிலைய இயக்குனர் முத்துக்குமரன் மத்திய தொழில் பாதுகாப்பு படை அதிகாரிகள் வருவாய்த்துறையினர் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டனர் கூட்டத்தில் விமான நிலைய பாதுகாப்பிற்கான சுற்றுச்சுவர் பணியை விரைந்து முடித்திடவும் மதுரை கப்பலூர் சுற்றுச்சாலையை மாற்றி அமைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்தும் விமான ஓடுபாதை விரிவாக்க பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.